SANGANATHAM
சங்கநாதம்

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
# SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

Jan, 2023

37-1



அன்புள்ள சகோதர சகோதரிகளே, பெரியோர்களே, வணக்கம்.

உங்கள் எல்லோருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

கடந்த நான்கு மாதங்களும் எங்கள் மன்றத்தின் ஒரு பரபரப்பான காலம். தீபாவளி கொண்டாட்டத்தில் ஆரம்பித்து, விசேட பிறந்ததின விழா (Milestone Birthday), ஜமேக்கா (Jamaica) சுற்றுலா, நத்தார் பண்டிகை, மேலும் வருடாந்த சீட்டுழுப்பு போன்ற நிகழ்வுகளை மிக சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தோம். இவையெல்லாவற்றையும் திறம்பட, வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுவது மட்டுமல்லாமல், இதர்க்கெல்லாம் உறுதுணையாக நின்றுதவிய எமது நிர்வாக சபை உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டர்கள், மன்ற உத்தியோகத்தர்கள், மன்றத்தின் இளம் சிட்டுக்கள் மற்றும் எமது மன்றத்தின் நலன் விரும்பிகள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். இவர்களின் உதவியின்றி எம்மால் சிறப்பாக செயலாற்றியிருக்க முடியாது. வருடாந்த சீட்டிழுப்புக்கு பண உதவி, பரிசில் பொருள் உதவி வழங்கியவர்கள் அதனை வெறுமனே ஒரு பண உதவியாக பார்க்காமல், மன்றத்துக்கு தாமும் ஏதோவொரு வகையில் உதவ வேண்டும் என்ற நோக்குடனேயே செயலாற்றியது மனதுக்கு மகிழ்வை தருகிறது.

புது வருடத்தில் புதிய சிந்தனைகளோடும், பல புதிய செயற்திட்டங்கள், நிகழ்வகளோடும் ஆரம்பிக்க திட்டமிட்டு இருக்கின்றோம். வருடத்தின் முதன் நிகழ்வாக மன்றத்தின் 37வது பிறந்ததினத்தை தைமாதம் 13ம் திகதி பரோஸ் மண்டபத்தில் கொண்டாடவிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். அத்துடன் தமிழர் மரபுத்திங்கள் கொண்டாட்டமும் தமிழர் கலாச்சாரம், கலைகள், பண்பாடு குறித்த பண்பாட்டு கோலங்களுடன் தைமாதம் 29ம் திகதி காணொளி வாயிலாக கொண்டாடப்படவிருக்கிறது . அதட்கான ஆயத்தங்களை கலாச்சார குழுவினர் செய்து வருகின்றனர்.

எங்கள் மன்ற உறுப்பினர்கள் பலரும் கைவசம் மிக உயர்ந்த செயட்பாடுகளை கொண்ட கைத்தொலைபேசி (Smart phones), iPad, Android Tablets, Computers என்பனவற்றை வைத்துள்ளார். ஆனால் அதன் பயன்பாடு குறித்தும், அதனை எவ்வாறு உபயோகிப்பது என்ற தவிப்போடும் இருப்பதை காண முடிகிறது. இதனை மனதிற்கொண்டு தொழில்நுட்ப பயிற்சி பட்டறை ஒன்றினை நடத்துவதட்கு முயற்சிகள் மேட்கொள்ளப்பட்டு வருகிறது . இதட்கான ஆயத்தங்கள் செய்து முடிந்தவுடன் உங்களோடு அந்த விபரங்களை பகிர்ந்து கொள்வோம்.

மன்றத்தால் வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்ட "நேயமுடன் ஒன்றிணைவோம்" என்ற நிகழ்ச்சி திட்டம் நாம் எதிர்பார்த்தவண்ணம் மிக நன்றாக எம்மவர்களுக்கு உதவியாக இருக்கிறது . அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பலரும் எம்மை அணுகுவது திட்டத்தின் வெற்றியென்றே கூறலாம். மாசி மாதம் ஏழாம் திகதி வருட பூர்த்தியினை உங்களோடு இணைந்து கொண்டாடவுள்ளோம். அதட்கான விபரங்கள் பின்னர் வழங்கப்படும்.

எம்மன்றம் ஆரம்பித்த காலம் தொடக்கம் 5 வருடங்களுக்கொரு முறை ஒரு பெரும் விழா கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் கோவிட்பேரிடர் காரணமாக 35வது ஆண்டு விழாவை எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொண்டாட முடியவில்லை. இவற்றையெல்லாம் நிவர்த்தி பண்ணும் முகமாக இந்த வருடம் ஒரு மாபெரும் ஒன்றுகூடலினை செப்டம்பர் மாதமளவில் கொண்டாட நிர்வாகசபை முடிவெடுத்திருக்கிறது . இந்த நிகழ்வு குறித்த மேலதிக விபரங்கள் அடுத்தடுத்த சங்கநாத இதழ்களில் உங்களுக்கு தெரிவிக்கப்படும்.. இது எமது மன்றத்தின் விழா எங்கள் விழா . ஆகவே உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன். மன்றத்தின் வளர்ச்சி ஒருவரது கையிலோ அல்லது சிலரின்

கையிலோ இல்லை. இவையெல்லாம் உங்கள் கைகளில்தான் உள்ளது. ஆகவே, எல்லோரும் ஒன்றிணைந்து எங்கள் மன்றத்தை மேலும் வளர்ப்போம் என்று உறுதி கொள்வோம்.

வாழ்க ஒன்டாரியோ முது தமிழர் மன்றம்!

சீவரத்தினம் மகேந்திரா--தலைவர்

## Important Messages/முக்கிய அறிவித்தல்கள்

**Membership Renewal:** Membership for year 2023 could be done through e-transfer, cheques or visiting the STC office during weekdays between 9.30-2.00pm. E-transfer to be done at seniortamils@gmail.com

If you like to get the quarterly newsletters (Sanganatham) by post, please pay an additional $10 along with your membership. Membership receipts will be sent by email.

2023க்கான வருடாந்த சந்தாப்பணம் குறித்து நினைவூட்ட வேண்டிய தருணமிது. இந்த வருடத்துக்கான சந்தாப்பணத்தை தபால் மூலமோ, வங்கி பரிமாற்றம் மூலமோ (e-transfer) அல்லது வாரநாட்களில் மன்ற அலுவலகத்திலோ செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம். மேலும் சங்கநாதம் காலாண்டு இதழ்களை தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 10 டொலர்களை மேலதிகமாக செலுத்தி பெற முடியும். அங்கத்துவ பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

### Free Tax Clinic for STC members under Community Volunteer Income Tax Program (CVITP) administered by the CRA

### இலவச வருமானவரி சேவை -2023 தனி நபர் வருமான வரி பத்திரம் நிரப்புதல்

The Free Tax Clinic is an effort by the Senior Tamils' Centre of Ontario and its dedicated volunteers to offer help STC members to file income tax returns.

All volunteers receive training from Canada Revenue Agency (CRA) through the CVITP program and can offer simplified returns filing only. STC provides Simplified filing services to:

- Single Person……………………….Total annual income of $35,000 or less
- Couples………………………………..Total combined annual income of $45,000 or less
- One Adult with child…………….Total annual income of $37,500 or less
- Each additional dependent…..add $2,500 to above
- Interest income……………………..less than $1,000

We do not assist with returns for:

- Business or self-employed individuals
- Deceased persons
- Individuals with rental income
- Individuals with capital gains (stocks, bonds, annuities)
- Bankruptcy
- Foreign Property

❖ **STC tax clinic will operate by appointment during the week from 1st of March until April 30th, 2023.**
❖ **To book an in-person appointment please call the STC office at 416-496-2897**

**முட்பதிவுகளுக்கு மன்ற அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்**



**இதழாசிரியரின் பார்வையில்.........**

புத்தாண்டு எங்களை அரவணைத்துக்கொண்டது. தோல்விகளை எமது அனுபவங்களாக்கி வெற்றிகளில் தடம் பதிப்போம். புது முயற்சிகள் துளிர் விடட்டும். புன்னகை அனைவர் முகங்களிலும் பொலியட்டும். நம்பிக்கையோடு முன்னோக்கி நடப்போம். அனைவர்க்கும் எனது புது வருட, தைப்பொங்கல், தமிழ் மரபுத் திங்கள் வாழ்த்துகளும், வணக்கங்களும்.

2023 .01 .14 தைப்பொங்கல் தினத்தில் ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தனது 37 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது. எத்தனை இடர்கள், எத்தனை சவால்கள். எதிர்கொண்ட தடைக்கற்கள் யாவினையும் முறியடித்து அவற்றை வெற்றிப்படிகளாக மாற்றிக்கொண்டு இவ்வளவு தூரம் வந்திருப்பதனை எண்ணிப்பார்க்கையில் வியப்பாகத்தான் இருக்கிறது. 1985 செப்டெம்பரில் எம்முதியோர் எதிர்நோக்கிய அவலங்களைப் போக்க எண்ணிய செயற்கரிய செய்யும் பெரியோர்களால் 1986.01.14 இல் வித்திடப்பெற்று, இன்று பெரு விருட்சமாக எழுந்திருக்கும் எம்மன்றத்தினை மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

அன்று எண்ணித் துணிந்த கருமமானது பின்னே வந்த பல பெரியாரது தன்னலமற்ற செயற்பாடுகளாலும் தெளிந்த சிந்தனையாலும் ஒருமித்து முன்னெடுக்கப்பட்டமையாலேயே பெருந்தொற்றுப் பேரிடர்க் காலத்திலும் எம்மால் நிமிர்ந்து நிற்கவும், செயலாற்றவும் கூடிய வலுவைத் தந்தது. எம்முன்னோர்களின் கனவு மெய்ப்பட வேண்டுமெனில் ஒவ்வொரு உறுப்பினரும் தாமாக முன்வந்து தமது பங்களிப்பை வழங்கவேண்டும். பலர் ஒருவருக்காகவும், ஒருவர் பலருக்காகவும் எனும் கூட்டுறவுச் சிந்தனையும், இலட்சிய நோக்கும், கருத்தொற்றுமையும் வலுப்பெறவேண்டும்.

மன்றம் தொடர்ச்சியான தனது வளர்ச்சியின் வெளிப்பாடாக இன்று வாரத்தில் ஐந்து நாட்களும் உடல், உள வள நிகழ்வுகளை முன்னெடுத்துவருகிறது. வாரம் தோறும் புதன்கிழமைகளில் வீட்டிற்கே வந்து எங்களை மகிழ்விப்பதோடு, சிந்தனைக்கு மேலும் மெருகூட்டும் "நிலாமுற்றம்" 2022 10 04 இல் 100 ஆவது நிகழ்வினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தொடர்ந்து வனப்பூட்டிவருகிறது. மேலும் மாதாந்தம் இரண்டாவது செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் "ஒன்றிணைவோம் நேயமுடன்" நிகழ்வும் எமது குறிக்கோளை நோக்கி அனைவரையும் தன்வயப்படுத்திக் கொண்டுசெல்வது குறிப்பிடத்தக்கது. சென்ற வருட இறுதி நிகழ்வின்போது Dr.M வரகுணன், சட்டத்தரணி மனுவேல் ஜேசுதாசன் ஆகியோர் இணைந்து வழங்கிய கேள்வி பதில் நிகழ்வு மிகப் பயனுடைத்தாய் அமைந்தது சுட்டிக்காட்டத்தக்கதொன்று.

மன்ற அங்கத்தவர்கள் தமது பிறந்த நாளைக் கவனத்திற்கொள்ளாவிடினும் முது தமிழர் மன்றம் 1992 இலிருந்தே பிறந்த நாள் வாழ்த்தினைக் கிரமமாகத்தெரிவித்து அளவளாவி மகிழ்வித்து வருகிறது. (Milestone Birthday) விசேட பிறந்த நாள் காணும் உறுப்பினர்களை இணையர்களாக அழைத்து ஆண்டுதோறும் கௌரவித்து வருகிறது. 2022 ஆம் ஆண்டுக்கான நிகழ்வு ஒக்டோபர் 02 இல் சிறப்பாக நடைபெற்றமையும், தீபாவளி, நத்தார் கொண்டாட்டங்கள் காணொளி (zoom) வாயிலாக அனைவரது பாராட்டுதலோடும் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறியமையும் கவனத்திற் கொள்ளத்தக்கவை. தீபாவளி, நத்தார் விழாக்களில் முது தமிழர் மன்றத்து இளம்தளிர்கள் வழங்கிய நிகழ்வுகள் முத்தாய்ப்பு வைப்பனவாயமைந்தன. Extendicare இலுள்ள தமிழ் முதியோருக்கான மாதாந்த பிரார்த்தனைக் கூட்டங்களும் பல்வேறு புதிய உத்திகளோடு அனைவரும் மனமகிழ்வடையும் வண்ணம் நடைபெற்று வருகிறது. வழமை போல இவ்வாண்டும் தீபாவளிப் பரிசுப்பொருட்களும் அவர்களுக்கு அளித்து மகிழ்ந்தோம்.

பெருந்தொற்றுப் பேரிடர்க் காலத்தில் தடைப்பட்டுப்போயிருந்த சுற்றுலா பற்றிய எண்ணங்கள் மீண்டும் எம்மைப் பற்றிக்கொள்ள ஆரம்பித்தன. இதனை மனதிருத்தி இயன்றளவு விரைவாகத் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டதே ஜமேக்கா பயணம். 2022 நவம்பர் 17 இல் ஆரம்பித்த 50 அங்கத்தவர்கள் பங்கேற்ற ஒருவார கால இச்சுற்றுலா அனைவருக்கும் முழுமனநிறைவைத் தந்ததாய் அமைந்தமை எம்மன்றத்தின் "எண்ணித் துணியும்" ஆற்றலை மீண்டும் நிரூபித்திருக்கிறது.

எமது மன்றத்தின் ஒவ்வொரு செயற் திட்டத்தினையும் முன்னெடுப்பதற்கு முறையான கலந்துரையாடலும், முன்னெடுப்புக்களும், ஒன்றுபட்ட உழைப்பும் அத்தியாவசியம். எந்தவொரு பொது ஸ்தாபனத்தினதும் தொடர்ச்சியான வெற்றி அதனை நிர்வகிக்கும் குழுவினரது தேடல், பொறுமை, விட்டுக்கொடுத்தல், விடாமுயற்சி போன்ற காரணிகளிலேயே தங்கியிருக்கிறது. ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தின் தொடர் வெற்றிகளைச் சாத்தியமாக்கித் தருகின்ற தலைவர், இயக்குனர்சபை, உபகுழுக்கள், மன்ற உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான குழுவினர் என்றும்

பாராட்டுக்குரியோரே. மேலும், எம்மோடு என்றும் இணைந்து பயணிக்கும் மன்ற அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள், நன்கொடையாளர்கள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாவர்க்கும் பிறக்கும் இப்புத்தாண்டில் சகல சௌபாக்கியங்களும் கிட்டவேண்டுமென இயற்கை அன்னையை வேண்டி நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.


மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகள் அற்ற வாழ்க்கை அல்ல.
தடைகளை வெற்றிகொள்ளும் வாழ்க்கையே.
சொல்லடி, சிவசக்தி-எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"


அன்புடன் பொ. கணேசலிங்கம்

## *வாழி நீ! ஒன்ராறியோ முது தமிழர் மன்றம்*

பால் நினைந்தூட்டும் தாயினைப் போலே
காலையில் எழுப்பி உடல் வளம் பெருக்கி
மாலைகள் தோறும் மனமகிழ்வினையூட்டி
நேயமுடன் எம்மை ஒன்றாயிணைக்கிறாய்
பாசத்தோடு இளந்தளிரைப் பழகவும் வைக்கிறாய்
ஆசையாய் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்கிறாய்
மாயமோ இதுவென மகிழ்வுறச் செய்கிறாய்
ஆதலாலுன்னை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.
பேரிடர் வந்தெம்மை நெருக்கிய வேளை
காணொளியாய் நம் வீட்டுக்கு வந்தாய்.
கூட நாம் இருப்பதாய் நம்பிக்கை தந்தாய்
சோர்ந்த மனங்களைக் களிப்புறச் செய்தாய்.
உழைப்பே எமக்கு உயர்வினைத் தருதலால்
களைப்பே இன்றிக் காரியம் ஆற்றலால்
விளைந்தே நன்றாய் பொலிவுற நிற்றலால்
குழைந்தோம் உன்னிடம் எம் மனப்பற்றினால்.
அகவை முப்பத்து ஏழு காணும்- நம்
தகவுடை ஒன்ராறியோ முது தமிழர் மன்றே
தயாள மனதுடைச் சீவரத்தினம் மகேந்திரா
தலைமைகொள் இயக்குனர்சபை யுடனிணைந்த
வலுமிகு மன்ற அலுவலர் ஆற்றலினூடு
நிலமிசை நின்று நிலைபெற்று வாழி.

*ஜயாத்துரை ஜெகதீஸ்வரன்*



## தமிழர் மரபுரிமைத் திங்கள் -2023

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர். தை மாதத்தில் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தமிழ்க் கடவுளாம் முருகனின் தைப்பூசம் போன்ற பெரு விழாக்கள் இடம்பெறுகின்றன. பல சிறப்புப் பெற்ற இம்மாதத்தில் தமிழ் மரபுரிமை விழிப்பு மாதமாக அமைந்தது பொருத்தமானதே. 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எம்மவர் மத்தியில் காலமறிந்து உதித்த கருப்பொருள் 2010 இல் தமிழர் மரபுரிமைத் திங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டது.மேலும், எம்மவர்கள் தொடர் முயற்சியால் தமிழ் மொழி, பண்பாடு, கலைகளைக் கொண்டாடும் விதமாக கனடா அரசினால் 2016 இல் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது..

கடந்த 2000 ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் அதில் 700 வருடங்களே தமிழர்கள் தமிழர்களால் ஆளப்பட்டுள்ளனர். ஓர் இனத்தை அழிப்பதற்கு அவ்வினத்தில் வாழும் மக்களை அழிக்கவேண்டியதில்லை. அவர்களின் மொழி, கலை, பண்பாட்டினை அழித்தாலே போதுமானது. இது பல இடங்களில் நடந்துள்ளது. பல இனங்கள் அழிந்த வரலாறும் உண்டு. இதுவே நாமும் எதிர்நோக்கும் பிரச்சினையுமாகும். ஆகவே நாம் விழித்தெழ வேண்டும்.பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆட்சியில் குரலற்ற இனமாக வாழ்ந்து வருகிறோம். இதற்கு, ஒற்றுமையின்மையும், அடிமைத்தனமும், அறநெறியற்ற தலைமைகளுமே காரணம். தமிழுக்கும், தமிழினத்திற்கும் பல்வேறு இன்னல்கள் வந்தபோதும் வளைந்து, நெளிந்து உயிர்ப்போடு இருக்கிறது. இதற்குள்ளும் வலுப்பெறும் மொழியின் செழுமையும், இனத்தின் பெருமையும் தொடர்ந்து செயற்பட்டுவரும் தன்னலமற்ற செயற்பாட்டாளர்களின் தொடர் முயற்சியே. இத்திணை பழமையும் பெருமையும் மிக்க எமது இன விழுமியங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டுசெல்வது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தமிழர் மரபுரிமைத் திங்களில் கலை விழாக்கள், கொண்டாட்டங்கள் என்று நின்றுவிடாமல் தொடர் செயற்பாட்டினை கொண்டு செல்ல உறுதி கொள்ளவேண்டும்.

முதலில் அழிந்துவரும் கலைகளை மீட்டெடுக்க வேண்டும். இன்றுள்ள முக்கியமான பிரச்சினை உலகெங்கணும் பரந்து வாழும் நம் இளைய தலைமுறையினர் எமது பண்பாடுகளில் இருந்து சிறிது, சிறிதாக விலகிச்செல்வதே. இதனை நாம் தடுத்தாக வேண்டும். இவர்களுக்கு எமது மொழி, கலை, வரலாறு, பண்பாட்டுப் பெருமைகளை அறியச்செய்தல் அவசியம். கனடிய அரசாங்கம் எமது இன விழுமியங்களைப் பாதுகாக்கவெனப் பல்வேறு வழிகளில் உதவியளித்து வருகிறது. இதனை உணர்ந்து வீட்டிலும், பொது இடங்களிலும் எம்மவர் மத்தியில் எம்மொழியை முதன்மைப் படுத்தவேண்டும். பிள்ளைகளுடன் தமிழில் பேசவேண்டும். தமிழை ஒரு பாடமாகக் கற்கச் செய்யவேண்டும். சங்கீதம், நடனம் போன்ற கலைகளை இயலுமான அளவில் தமிழ் விளங்கக் கற்பிக்க வேண்டும். எமது விழாக்கள், பண்டிகைகள் எங்கள் வாழ்வியலுடன் இணைந்திருப்பதனை எடுத்துக்கூறவேண்டும்.

எமது மன்றம் மிகுந்த விழிப்புணர்வுடனும், தொலைநோக்குப் பார்வையுடனும் செயற்பட்டு வருகின்றது. இதற்குத் தலை சாய்த்து வணங்குவதுடன் ஒவ்வொரு உறுப்பினரும் உணர்வு பூர்வமாக இணைந்து உழைத்தல் காலத்தின் கட்டாயம். 10 வருடங்களுக்கு மேலாக ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் தமிழ் மரபு திங்கள் விழாவினை வெகு சிறப்பாக கொண்டாடி வருகிறது. இந்த வருடமும் அதன் தொடர்ச்சியாக ஜனவரி மாதம் 29 திகதி மன்றத்தின் தமிழ் மரபு திங்கள் விழா காணொளி வாயிலாக கொண்டாடப்பட இருக்கிறது என்ற மகிழ்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்வதோடு எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு.என்ற தாரக மந்திரத்துடன் நிறைவு செய்கிறேன்.




பொ. கணேசலிங்கம்

**“Making a difference to our community through Caring & sharing”**



It all started three and a half decades ago and it continues. Senior Tamils’ Center of Ontario (STC), a Non-Profit organization based in Scarborough is a grouping of Senior Tamil community members who have been keeping themselves active and, in that process, maintaining an active relationship with the community. There are things that great organizations do different from others. It’s that quality what makes them go from good to great. We have talked about it many a times. There are times, you kind of get in to this dream and you want to do more. You want the organization to grow. You know how important it is. At 37 years of age, it’s time we grow up and take our rightful place in the community.

People who had been watching our organization grow, are wildly impressed by everything we’ve accomplished during the last 37 years. Yes, the governance model we have adopted to run our affairs is a model to be emulated by the other organizations in our communities. The beauty of our model is that we have evolved within ourselves. There was so much learning involved that we never got tired of, we kept accepting changes and taking up challenges, and successes naturally followed us. So, what that was doing, though, was it was really keeping us within the conservative mode but vibrant with positive changes. Then obviously during this journey, we have made some shifts in the last few years and have started wearing our “big boots”. We are now partnering with some of the big names in our sphere of influence, like the South Riverdale Community Health Centre, Moksha Canada Foundation etc. We are venturing into ambitious programs and experimental projects all for the sake of meeting the needs of our communities. Times are changing and we are moving ahead with the changes.

Our organization has evolved with times, we now have new breed of members and volunteers getting attracted by our programs. We now have fresh blood flowing in and rejuvenating our activities. We can attribute this success to a couple of factors. For one, we have really started getting smarter about our model of operations and then a real “mindset shift’ has come about within the approaches we take in achieving our objectives.

Based on the community’s needs and demands, we now see all three levels of the governments focusing on mental health and emotional wellbeing of its citizens. Naturally, mental health and emotional wellbeing has become the latest foray for STC to get involved. A group of STC members have grouped themselves together and are willing to lend their “ears” to members who need attention. There are times when everyone needs somebody to listen to them, not really someone to give advice or suggestions but just to listen to someone expressing thoughts, concerns and may be worries. This group of volunteers have been handpicked to offer this service based on their perceived emotional makeup and willingness to help. The selected group has been put through formal training offered by qualified medical professionals. It’s clearly understood that this group of non-professionals do not offer any counselling support or medical help.

From a personal point of view, I am proud to be part of this great organization. I have seen the organization grow in stature and become the rallying point for Tamil Seniors in the city and the province. When I joined this organization, I had many dreams, I wanted the organization to grow and I wanted to grow with it. Now I have managed to make my dreams for the organization come true, may be not all my dreams, but many of them at least. I am grateful to The Senior Tamils’ Center of Ontario for allowing me to be part of its glorious journey in serving our communities.

**Going by all what has been achieved by this organization during the last 37 years, we have no doubt that Senior Tamils’ Centre of Ontario will continue to be scaling heights in keeping our seniors hale and hearty.**

*Vasanthy Shanthakumar*

Executive Director

## முதற் குடி மக்களின் தொடர் கதை - அன்றும் இன்றும்

புலம் பெயர்தோரையெல்லாம் வரவேற்று, அரவணைத்து வாழவைக்கும் நாடு, எம் கனடா நாடு என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனினும் First Nations People என்றழைக்கப்பட்ட முதற்குடி மக்களின் கடந்தகால இருண்ட வாழ்க்கையே, கனடாவின் கறை படிந்த சரித்திரமாக மாறியதன்உண்மையைஎவரும் மறக்கவம் முடியாது. மறைக்கவும் முடியாது. அது எவ்வாறு நடந்தது என்பதை புலம் பெயர்ந்தோராகிய நாம், தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அண்மையில் British Columbia மாகணத்தில், Kamloops என்ற இடத்திற்கு அருகாமையில் ஒரு அதிர்ச்சி தரும் விடயம் கண்டறியப்பட்டது. இது Residential Schools என்று அழைக்கப்பட்ட விடுதிசார்பள்ளியின் வளாகத்தில், முதற்குடி மக்களது, 215 குழைந்தைகளின் சடலங்கள் இருப்பதை கண்டுபிடித்தனர். இச்சடலங்கள, ஒரு குறியீடுமில்லாமல் புதைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து, கனடாவின் அனைத்துமாகாணங்களிலும் இயங்கி வந்த இதுபோன்ற விடுதிசார்பள்ளிகளின் நிலங்களிலும் இத்தகய முதற்குடி மக்களின் குழந்தைகளுக்கும் ஏற்பட்டிருந்ததை உலகம் அறிந்தது. இது எவ்வாறு நடந்திருக்கலாம் என்பதை அறிய, கனடாவின் சரித்திரத்தை சற்று பின்னோக்கிப் பார்ப்போம். Indian Act என்ற சட்டம் ஒன்றினை, அன்றய கனேடிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தது. இதை Assimilation Policy என்று ஆங்கிலத்தில் கூறுவர். இது 3 பகுதிகளை கொண்டு அடங்கியது. முதலாவதாக, முதற்குடியினர் அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட Indian Reserves இல் மட்டும் வாசிக்கலாம். இரண்டாவதாக அவர்களின் குழந்தைகளை பெற்றோரிடம் இருந்து பிரித்தெடுத்து விடுதிசார்பள்ளிகள் என்ற Residential Schools இல் ஐரோப்பிய பாணியில் வளர்கப்படுவார்கள்.

மூன்றாவதாக, முதற்குடி மக்கள் தமது கலாச்சாரத்தை பேணாது ஒதுக்கிவைக்க வேண்டும் என்பதே.
இது ஒரு இன ஒடுக்கத்தை கொண்டு வந்த மிக குறுகிய சட்டம் என்பதில் ஐயமில்லை. தம் ஐரோப்பிய கலாச்சாரம், முதற்குடி மக்களின் கலாச்சாரத்தைவிட உயர்ந்தது. எனவே அவர்களது இனத்தை அழிக்க முடியாவிட்டாலும், மாற்றியமைக்க வேண்டியதொன்று என அன்று ஐரோப்பியர்கள் திடமாக நம்பினார்கள். இதன் பலனாக முதற்குடி மக்களின் வாழ்வியலில் தாங்கொணாத துயரங்களும், மாற்றங்களும் ஏற்பட்டன. விடுதிசார்பள்ளிகளை நடாத்தும். பொறுப்பு, கத்தோலிக்க திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களின் மேற்பார்வையில், குழந்தைகள் வலுக்கட்டாயமாக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். கூந்தலை வெட்டி, கிருமிநாசினியில் குளிப்பாட்டி, இக்குழைந்தைகளுக்கு வரிசை வரிசையாக படுக்கைகள் இடப்பட்டு, அவர்களின் ஆளுமையின்படி நடந்தனர். அதனால் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் ஏராளம். உணவு பற்றாக்குறை, தம்மொழியில் பேசினால் தண்டனை, பாலியல் துன்புறுத்தல்கள், ஐரோப்பியர்கொண்டுவந்த நோய்களுக்கு எதிர்ப்புத்தன்மை, என பலதரப்பட்ட இம்சைகளுக்கு ஆளாகி பல குழந்தைகள் இறந்தனர். அதை பெற்றோருக்கும் தெரிவிக்காமல் , ஒரு குறியீடுமின்றி அவர்களை புதைத்தனர். இச் சடலங்களே மேற்கூறியவாறு இப்போது கண்டறியப்பட்டன. ஒருவகை தப்பி பிழைத்து இப்பள்ளிகளில் இருந்து வெளிவந்தவர்களும், மனச்சிதைவுக்கு ஆளாகி, இயல்பான வாழ்க்கையை வாழ முடியாது தவித்தனர்.

இனி, மீண்டும் சரித்திரத்தை முன்னோக்கி செலுத்துவோம். கனடாவின் 150 பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது முதற்குடி மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு பரிகாரமாக பாராளுமன்றத்தின் மூலம் பொது மன்னிப்பு கேட்கப்படவேண்டும் என்ற அபிப்பிராயம் மேலெழுந்தது. அதன்படியே அன்றய பிரதமர் Justin Trudeu, ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடன், அவ்வாறே செய்தார். அதனைத்தொடர்ந்து 2015ல் TRUTH AND RECONCELIATION Commission என்ற கூட்டு முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டது. இது முதற்குடி மக்களின் சரித்திரத்தில் ஒரு திருப்பு முனை என்று பலரும் நம்பினர். Assembly of First Nations என்ற கூட்டணி மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைவரும், Ministry of Indian Affairs என்ற அமைச்சின் பிரிவிலிருந்து சிலரும் ஒன்று கூடி முதற்குடி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை வகுக்க முற்பட்டனர். பழங்குடி மக்களைப்பற்றிய புரிந்துணர்வு, நல்லிணக்கம், பொருளாதார நட்ட ஈடு, பொருளாதார அபிவிருத்தி, வழக்கொழிந்த மொழிகளையும் மீண்டும் உயிர்பித்தல் என பல விடயங்கள்குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டனர். எல்லாவற்றையும் ஒரே நாளில் சரிப்படுத்த முடியாவிட்டாலும், இது ஒரு புதுப்பானதயின் ஆரம்பம் என பலரும் உறுதியாக நம்புகின்றனர். இவற்றின் பலனாக, கத்தோலிக்க மதகுரு Pope Francis, கனடாவுக்கு வருகை தந்து, முதற்குடி மக்களுக்காக, 3 இடங்களில் பிரதான கூட்டங்கள் ஏற்படுத்தினார்.



இன்றைய இங்கிலாந்தின் அரசர் 3வது Charles அரசர், அன்று இளவரசராக இருந்தபோது முதற்குடிமக்களின் மக்களின் கோரிக்கைகளை நேரில் கண்டறிந்தார். ஒன்டாரியோ பாட திட்டங்களின் மூலக்கூற்று முதற்குடி மக்களைப்பற்றிய சரித்திர உண்மைகள் கூறப்படவேண்டும் என்ற திட்டமும் உருவாகியது. குடியுரிமை கோருவோருக்கு அவர்களது நேர்முகதேர்வுக்கு கொடுக்கப்படும் கையேட்டிலும் முதற்குடி மக்களது சரித்திரம் கூடுதலாக மாறும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இம்முயற்சிகளெல்லாம் முன்னேற்றப்பாதையின் அறிகுறிகளாகும். கனடாவில் புலம் பெயர்ந்து, மகிழ்ச்சியாக வாழும் நாம், முதற்குடி மக்களுக்கு உரிய மரியாதை, மதிப்பு ஆதரவு- இவற்றை கொடுக்க தவறிவிடக்கூடாது.

முதற்குடி மக்களின் நிலைமையை வேறு கோணத்தில் ஆராய்வோரும் உண்டு. 1970 தொடக்கம் விடுதிசார் பள்ளிக்கூடங்களும், கட்டாயக் கல்வியும் பெரிதும் மதிக்கப்பட்டு. இதனால் முதற்குடிமக்களின் முதியோருக்கும் இளையோருக்கும் இடையே வேறுபாடான கருத்துக்கள்வர ஆரம்பித்தன. விவசாயம், வேட்டையாடுதல்போன்ற தம் மரபுசாரா பழக்கவழக்கங்களை கைவிட்ட இளையோர், நகர வாழ்க்கையை நோக்கிச்செல்ல முற்பட்டனர். அதன் விளைவாக தம் தாய்மொழி மறந்து, அரசாங்கம் கொடுக்கும் Welfare பணத்தை எதிர்பார்த்து கையேந்தி நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். வாழ்க்கையின் மதிப்பு பிரயோசனமற்றதாக மாறத்தொடங்கியது போது, வேறு பல தீய பழக்கவழக்கங்களும் அவர்களை தொற்றிக்கொன்டன. குடிப்பழக்கம் போதை மருந்துகளுக்கு ஆளாகுதல், களவு, முடியாமைனால் தற்கொலை முயற்சி போன்றவற்றை உதாரணமாக எடுத்துக்கூறலாம். காவல் துறையினரும் முதற்குடியினரை சரியாக நடத்துவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. முதற்குடி மக்கள் தம் தேவைகளை, எதிர்பார்ப்புகளை தாமாகவே நிர்ணயிக்கும் முறையே சாலச் சிறந்தது என்பதே முதற்குடி மக்களுக்கு அவர்களின் பூரண உரிமை கிட்டியதற்கான அடையாளம். எது எவ்வாறு நடப்பினும் முதற்குடி மக்களும், அவர்களது எதிர்காலமும் சுபிட்சமாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன், நாம்அவர்களை அனுசரித்து நடக்கவேண்டும்.

நன்றி வணக்கம்

கோகிலா விவேகானந்தன் Mem # 1837





*Milestone Birthday Celebrations at Burrows Hall Community Centre on the 2nd of Nov 2022*

ஒரு மனிதர் சாலை ஓரத்தில் ஓடிக் கொண்டிருந்தபோது தெரியாமல் இன்னொரு நபர் மீது இடித்துவிட்டார்.ஐயோ… தெரியாமல் இடித்து விட்டேன் மன்னித்து விடுங்கள் என்று இவர் சொல்ல, பரவாயில்லை என்று அவர் சொல்ல இருவருமே கண்ணியத்துடனும் புன்னகையுடனும் விடைபெற்றார்கள். அவர்களிடையே மனஸ்தாபத்துக்கான காரணமில்லாமல் போயிற்று. அன்று அவர் வீட்டுக்கு வந்தார். இரவு உணவு முடித்து திரும்புகையில் அவருடைய மகன் அவருக்குப் பின்னால் நின்றிருந்தான், கைகளைப் பின்னால் கட்டியபடி. தந்தை திரும்புகையில் அவனைத் தெரியாமல் இடித்து விட்டார். ‘வழியில் நிற்காதே. ஓரமாய்ப் போ..’ அவருடைய வார்த்தையில் அனலடித்தது. சிறுவன் முகம் வாடிப்போய் விலகினான். அவனுடைய கண்களில் சோகத்தின் நதி முளைத்தது. அது இமை ஓரங்களை இடித்து தரையிறங்கத் துவங்கியது. இரவு தூங்குகையில் அவர் மனதுக்குள் ஒரு சிந்தனை ஓடியது. வழியில் யாரோ ஒருவரிடம் நாகரீகமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளத் தெரிந்த எனக்கு சொந்த மகனிடம் அப்படி நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்று மனதுக்குள் எண்ணினார். நேராக எழுந்து மகனின் படுக்கையறைக்குச் சென்றான். உள்ளே மகன் தூங்காமல் விசும்பிக் கொண்டிருந்தான்.* அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. அவனருகில் மண்டியிட்ட தந்தை ‘என்னை மன்னித்துவிடு நான் உன்னிடம் அப்படிப் பேசியிருக்கக் கூடாது..’ என்றார்.*

சிறுவன் திரும்பினான். சிறுவனின் கண்களிலிருந்த கவலை சட்டென்று மறைந்தது. எழுந்து உட்கார்ந்தான். வேகமாக கட்டிலிலிருந்து கீழே குதித்து கட்டிலினடியில் வைத்திருந்த பூங்கொத்தை தந்தையின் கையில் வைத்தான். ‘இதென்ன?’ தந்தை வியந்தார். இன்றைக்கு வெளியே நடந்து கொண்டிருந்தபோது இந்தப் பூக்களைப் பார்த்தேன். பல நிறங்களில் இருந்த பூக்களைப் பொறுக்கி உங்களுக்காக ஒரு மலர்க்கொத்து செய்தேன். அதிலும் குறிப்பாக உங்களுக்கு நீல நிறம் பிடிக்கும் என்பதற்காக அதை நிறைய சேகரித்தேன். அதை உங்களிடம் ரகசியமாகச் சொல்வதற்காகத் தான் உங்கள் பின்னால் வந்து நின்றேன்…சிறுவன் சொல்ல தந்தை மனம் உடைந்தார். சிறுவனையும் மலர்களையும் ஒருசேர அணைத்த அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது. ஒரு மழலையின் அன்பைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தான் இருந்ததற்காக அவர் வருந்தினார். குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது. பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமை சாலியை சில நாட்களில் கண்டு பிடிக்கும். குடும்பம் அப்படியல்ல. ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும். வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படாவிட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது. எனவே தான் ஏழைகளால் மகிழ்ச்சியாய் இருக்க முடிந்த அளவுக்கு பணக்காரர்களால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள். அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.

### Recognizing seniors’ contributions-Congratulatory messages

- You can mark a special occasion by requesting a congratulatory message from:
- **His Majesty the King** sends birthday greetings to Canadians who are 100 years of age or older and to couples who are celebrating an anniversary of 60 years or more.
- **The Governor General** sends birthday greetings to Canadians who are 90 years of age or older and to couples who are celebrating an anniversary of 50 years or more.
  Tel: 613-993-8164 anniversaries.anniversaires@gg.ca
- **The Lieutenant Governor of Ontario** sends greetings to Ontarians celebrating birthdays of 90 years or older and couples celebrating anniversaries of 50 years or more. Tel: 416-325-7780
- **The Prime Minister of Canada** sends congratulatory certificates to Canadians celebrating birthdays of 65 years and up (at five-year intervals) and for couples celebrating anniversaries of 25 years or more (at five-year intervals). Tel: 613-941-6901
- **The Premier of Ontario** provides congratulatory certificates to Ontarians celebrating birthdays of 80 years or more and for couples celebrating anniversaries of 40 years or more.
  - Tel: 416-325-3777 CAB.Certificates@ontario.ca
- **Your Member of Provincial Parliament and/or Member of Parliament** for a variety of occasions. For more information, contact the constituency office of your local MPP or MP.
  - To find your MPP: Elections Ontario website To find your MP: (Voter Information Service)




**ஒன்ராரியோ முது தமிழர் மன்றம் புதிய உறுப்பினர்களை அன்புடன் வரவேற்கின்றது.**

3815 Rohini Perairavan
3816 Raja Sivaguru
3817 Susila Rasaratnam
3818 Rathy Vijeyaratnam
3819 Shanmuganathan Moothathamby
3820 Yogananthan Sabaratnam
3821 Pearl Yogananthan
3822 Agnes Amutha Nicholas Anton
3823 Sivaranjini Sandrasegaram
3824 Rasiah Thevarajah
3825 Balayogini Thevarajah
3826 Bhavany Thirukumaran
3827 Senathirajah Rajeswaran
3828 Srirani Rajeswaran
3829 Henry Dullewe
3830 Ranjini Dullewe
3831 Samuel Canagasaby
3832 Ranjini Canagasaby
3833 Sothimalar Muthulingam
3834 Thelma Williams
3835 Vasanthakumari Murugathas3815
3836 Vijeyaledchumy Paramasivam
3837 Sriranjan Nadarajah
3838 Krishnakumary Sriranjan
3839 Rita Xavier
3840 Anton Marianayagam
3841 Benjalin Sacramenthas
3842 Victor Santhiapillai

**The Senior Tamils' Centre deeply regrets to record the name of the following member who passed away in the recent past and condole with his family**

- Mr. M. Sathananthan, Mem # 644, passed away on the 11th of Dec 2022.

| DAY | ACTIVITY | VENUE |
|---|---|---|
| Happy Tuesday | Chair yoga-9.30am-10.30am<br>Craft class-11.30am-1pm | zoom |
| Hello WEDNESDAY Best day of the week | Cardio Exercise-9.30am-10.30am<br>Nila Mutram-7.00pm-8.30pm | zoom |
| HAPPY THURSDAY | Mat Yoga-Exercise-9.30am-10.30am | zoom |
| YAY IT'S FRIDAY! | Wellness Program-9.30am-12.30pm | Burrows Hall C. C<br>1081 Progress Ave<br>Scarborough |




**Monday Program at Moksha Canada Foundation**

**Navarathri Celebrations 2022**









தீபாவளி கொண்டாட்டம் 2022




Christmas Celebrations –Dec 2022

President
S. Makendra
416-816-2612

Vice President
S. Sritharan
905-201-1941

Secretary
Thavamalar Arulanandam
416-524-6031

Treasurer
K. Kuganesan
416-827-6875

Directors

Parama Natkunarajah
647-778-3612

Seetha Mills
416-756-4328

Raymond Santiago
416-438-9896

B. Balakrishnan
416- 571-6536

Wilmot Olagasegaram
647-894-8524

Arunthathy Karunakaran
416-289-6496

Editor/Director
P. Kaneshalingam
437-778-1904

Executive Director
Vasanthy Shanthakumar
647-238-0503


# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

**SENIOR TAMILS' CENTRE OF ON**

Registered Non- Profit Corporation # 923023
5200 Finch Ave. E, Unit 203, Scarborough ON M1S

Tel: 416-496-2897 /416-496-8850 Email: admin@seniortamilscentre.org

Website: www.seniortamilscentre.com












**Trip to Jamaica Nov 2022**